**பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் (கூறு 1 – மாகாண பகுதி) - 2021**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்தின் (கூறு 1 – மாகாண பகுதி) 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 யூலை 25 ஆம் திகதிய 6228 எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு (MPAHAPCLG) மாகாணங்களுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சாக உள்ளதுடன் ஒன்பது மாகாண கல்வி அமைச்சுக்கள் இச்செயற்திட்டத்தின் அமுலப்படுத்தல் முகவர்களாக உள்ளன. பொதுக் கல்வி முறைமையின் தரத்தை மேம்படுத்தி நிர்வாகத்தை வலுப்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 15,505 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் ஆக உள்ளதுடன் ஐடிஏ ஆல் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 ஆகஸ்ட் 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 15 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி. | செயற்திட்ட வழிநடாத்தல் குழுவின் கூட்டங்கள் 02 மாதங்களுக்கு ஒரு முறை நடாத்தப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டில் 01 கூட்டம் மாத்திரமே நடைபெற்றது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை . | செயற்திட்ட வழிநடாத்தல் குழுவின் கூட்டங்கள் சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 சனவரி 12 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள சுற்றறிக்கை | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் ஆண்டொன்றிற்கு 4 தடவை கூட்டப்படுவதற்காக ஒரு காலாண்டில் ஆகக் குறைந்தது ஒரு தடவை கூட்டப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டில் AMC கூட்டம் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | MOE ஆல் உள்ளக கணக்காய்வு மீளாய்வுக் குழுவை நடாத்துவதற்கு முன்மொழியப்பட்டது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் ஒழுங்காக நடாத்தப்பட வேண்டும். |

3. பௌதீக செயலாற்றல்

3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இந்த செயற்திட்டத்தின் கீழ் 09 விநியோக இணைப்புக் குறிகாட்டிகள் (DLI) அடைந்துகொள்ளப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் அடைந்துகொள்ளப்பட வேண்டிய இலக்குகளைக் குறிக்கும் முன்னேற்ற விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | DLIs கல்வி அமைச்சினால் அளவிடப்படுகிறது. எனவே, இது தொடர்பான தகவல் மற்றும் பொறுப்பு கல்வி அமைச்சின் பொறுப்பாகும். | கணக்காய்வாளர் கோரிய DLI முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் ஏனைய தகவல்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இந்த செயற்திட்டத்திற்காக நான்கு செயற்திட்ட அபிவிருத்தி நோக்கங்கள் (PDO) அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் முன்னேற்ற அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | கணக்காய்வாளர் கோரிய PDO முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் ஏனைய தகவல்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**3.2 விளைவற்ற/ பயன்படுத்தப்படாத/ குறைப்பயன்பாடுடைய வளங்கள்**

| இல. | விளைவற்ற சொத்துக்கள் | விளைவற்ற காலப்பகுதி ஆண்டுகள் | ஏற்பட்ட கிரயம் ரூபா மில்லியன் | காரணம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | கிரிபாவா மத்திய கல்லூரியின் ஆசிரியர் விடுதிகள் - (NWP) | 1 ஆண்டு | 1.09 | குறிப்பிடப்படவில்லை . | DLI 5 இன் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - புதிய தொழில் ரீதியாக தகுதி வாய்ந்த ஆசிரியர்களின் அளவின் அதிகரிப்பு. | விடுதிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வாரியபொல கல்வி அபிவிருத்தி நிலையத்தில் ஆங்கிலம் மற்றும் கணித கற்றல் நிலையம் | 1 ஆண்டு | 53 | (i) கல்வி அபிவிருத்தி நிலையத்திற்கு கையளிப்பதில் தாமதம்.<br>(ii) மின்சாரம் மற்றும் நீர், அலுவலக உபகரணங்கள், கற்றல் உபகரணங்கள் மற்றும் வளாகத்திற்கான நுழைவு என்பன ஏற்பாடு செய்யப்பட்டிக்கவில்லை. | உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் மொத்த மின்சார வழங்கலைப் பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | மேலதிக தாமதமின்றி பயிற்சி நிலையத்தை குறித்துரைத்த நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| ஆலோசகர்களின் வேலைக்கான பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.5 (i), 4.3 மற்றும் 4.4 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக 2021 ஆம் ஆண்டில் ஆலோசகர்களுக்கு ரூபா 8 மில்லியன் தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்ததுடன் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஆலோசகர்கள் இந்த | ஆலோசகர்களின் வேலைக்கான பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளிற்கு முரணாக இருக்கவில்லை என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். தேவையான நேரத்தில், செலுத்தப்பட்ட தொகையுடன் ஒப்பிடும்போது இந்த உத்தியோகத்தர்களிடமிருந்து நான் | தேவையற்ற பதவிகளை இரத்து செய்ய வேண்டியதுடன் அதன் பிரகாரம் அரசாங்க செலவினங்கள் குறைக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| செயற்திட்டம் தொடர்பாக போதுமான சேவையைச் செய்திருந்தமை கணக்காய்வின் போது மதிப்பிடப்படவில்லை. | சிறந்த சேவையைப் பெற்றேன் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். |

**3.4 செயற்திட்டத்தின் நிதி முன்னேற்றம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக ரூபா 9,773 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 49.36 மில்லியன் மொத்த தொகை செலவிடப்பட வேண்டியிருந்தது. எனினும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,888 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம் 19.32 சதவீதமாகும். | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | காலதாமதங்களை ஈடுசெய்வதற்கு நிறைவேற்று முகவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்திற்கு தனியாக நிதி பெறப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான அடிப்படை புத்தகங்கள் மற்றும் கணக்குகள் முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்குத் தேவையான அடிப்படைக் கணக்குப் புத்தகங்களை முறையாகப் பேணுவதற்கு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. | புத்தகங்கள் மற்றும் கணக்குகளை முறையாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் ரூபா 19.51 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 120 மேசைக் கணனிகள் 20 பாடசாலைகளுக்கு ஒவ்வொன்றிற்கும் 6 வீதம் கையளிக்கப்பட்டன. எனினும் மேற்படி கணனிகள் பாடசாலைகளுக்கு கிடைக்கப்பெற்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு எழுத்து மூலமான சான்றாதாரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துகள் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பதிவுகள் முறையாகப் பேணப்பட்டு, கேட்கப்படும் போது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பாடசாலையில் உள்ள மாணவர் எண்ணிக்கை அடிப்படையில் 860 பாடசாலைகளுக்கு மீளாய்வாண்டில் ரூபா 52.75 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. பிராந்தியக் கல்வி அலுவலகங்களினால் குறித்த பாடசாலைகளுக்கு நிதி வழங்கப்பட்டிருந்த போதிலும், இந்த நிதியானது செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தப்படுகின்றதா என மாகாணக் கல்வித் திணைக்களமோ அல்லது ஊவா மாகாணத்தில் உள்ள மாகாணக் கல்வி அமைச்சோ சரிபார்த்திருக்கவில்லை. | மாகாணக் கல்வித் திணைக்களம் மற்றும் மாகாணக் கல்வி அமைச்சு ஆகியவற்றால் வழிகாட்டல்கள் மற்றும் வடிவங்கள் மூலம் முன்னேற்றம் மதிப்பாய்வு செய்யப்பட்டிருந்தது. | பின்தொடர்தல் நடைமுறைகள் பொறுப்பான தரப்பினரால் சரியான நேரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். |